**<u>15.06.2023 அ.வ.எண்.117/2015 பி.வா.சா.1 சேகர், த/பெ.பத்மராஜ்</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

என் தந்தைக்கு நானும் என் சகோதரிகள் மதியழகி, ராஜகுமாரி மற்றும் 1ம் வாதி ஆகியோர் பிள்ளைகளாவர். 2ம் வாதி 1ம் வாதியின் மனைவி என்பது சரிதான். 1ம் வாதி வாய் பேச இயலாதவர் என்பது சரிதான். எனவே 1ம் வாதியின் சொத்துக்களை 2ம் வாதி தான் பராமரிக்கிறார் என்பது சரிதான். வாதிகள் கூத்தவேடு கிராமத்தில் வசிக்கின்றனர். நானும் அதே கிராமத்தில் வசித்து தற்போது கொரக்கோட்டை கிராமத்தில் கடந்த 2,3 வருடங்களாக வசிக்கிறேன். 1984ம் ஆண்டில் என் தந்தை இறந்தார். 2001ம் ஆண்டில் என் தாயார் இறந்தார். என் தந்தை உயிருடன் இருந்த போது பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை. என் தந்தை உயிருடன் இருந்தபோதே சொத்துக்களை பிரித்துக் கொடுத்தார் என்றும் அதன் அடிப்படையில் அது முதல் பட்டா இருந்து வருகிறது என்றும் சொன்னால் அது சரியல்ல. யு.டி.ஆரில் அவ்வாறு கொடுத்துள்ளார்கள். என் குடும்ப சொத்து மொத்தம் 13.5 ஏக்கர். நஞ்சை 3.5 ஏக்கர். புஞ்சை 9 ஏக்கர் 91 செண்ட். 2000ம் ஆண்டில் நாங்கள் பாகம் பிரித்துக் கொண்டோம். பாகப்பிரிவினை ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கிற்கு பிறகு நான் அ.வ.எண்.96/17ஐ தாக்கல் செய்துள்ளேன் என்பது சரிதான். அந்த வழக்கிலும் பாகப்பிரிவினை ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். என்ன நிவாரணம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனக் கேட்டால் எனக்கு தெரியவில்லை. 2 வழக்குகளிலும் சம்மந்தப்பட்ட சொத்துக்கள் வெவ்வேறானவை. பாகப்பிரிவினை படி நஞ்சையில் 1 ஏக்கர் 29 செண்டும், புஞ்சையில் 5 ஏக்கர் 91 செண்டும் ஒதுக்கபட்டது. எனக்கு வேறு தனிப்பட்ட சொத்துக்கள் இல்லை. புஞ்சையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை நான் விற்றுவிட்டேன். வாதி பெயரில் பட்டா உள்ள சொத்துக்களை நான் தான் அனுபவிக்கிறேன். எனது பெயரில் பட்டா உள்ள சொத்துக்களை வாதிகள் அனுபவிக்கின்றனர். பட்டா உள்ள விவரம் தெரியாமல் பாகப்பிரிவினை ஆவணத்தை எழுதிவிட்டோம். 1ம் வாதி பெயரில் பட்டா உள்ள சொத்தை வாதிகள் தான் அனுபவிக்கின்றனர் என்பது சரியல்ல. என் பெயரில் உள்ள பட்டா எண்.72 அந்த சொத்தை வாதிகள் தரிசாக விட்டுவைத்துள்ளனர். பட்டா எண்.72 சொத்தை நான் தான் அனுபவிக்கிறேன் என்பது சரியல்ல. வாதிகளை ஏமாற்றி சொத்தை அபகரிக்கும் நோக்கில் இந்த வழக்கை எதிர்த்து நடத்துகிறேன் என்றும் அ.வ.எண்.96/17 என்ற வழக்கை தொடர்ந்துள்ளேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கில் கண்ட சொத்துக்கள் எனக்கு பாகமாக கிடைத்ததும் தாய்வழி பாட்டி மூலம் உயில் வழிக்கிடைத்ததும் ஆகும். அந்த உயிலையும் தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் ஆமாம். எனது பாட்டிக்கு அவரது கணவரிடமிருந்து உயில் மூலம் சொத்து கிடைத்தது. அந்த உயிலையும் தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் தாக்கல்

செய்திருப்பேன். புல எண்.96/2ல் உள்ள சொத்து முழுவதும் வாதிகள் பராமரிப்பில் உள்ளது என்றால் அது சரியல்ல. பாதி அவர்களிடமும் மீதி என்னிடமும் உள்ளது. அந்த புல எண்ணுக்கு பட்டா எண் தெரியாது.

**மறுவிசாரணை - இல்லை.**